1970 நவம்பர் 26] [டாக்டர் திருமதி சத்தியவாணிமுத்து]

ஒன்றுக்கு விடையளிக்கையில் முன்னுள் நிதியமைச்சர் திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் பின்வருமாறு தெரிவித்துள்ளார் :

"பர்மா அகதிகளுக்குப் பயிற்சிப பள்ளி ஒன்று திருச்சியிலும், ஒன்று கோயமபுத்தூரிலும் இருக்கிறது".

மேற்கண்ட கூற்றைப் பின்வருமாறு திருத்த விரும்புகிறேன் :

"திருச்சிராப்பள்ளியிலும், கோயம்புத்தூரிலும் உள்ள (அதிக பார வண்டிப் பயிற்சிப் பள்ளிகள்) பயிற்சிப் பள்ளிகள் பொது மக்கள் அனைவருக்குமென்று பொதுவாக ஒப்பளிக்கப் பட்டுள்ளனவேயன்றி, பர்மாவிலிருந்து தாயகம் திரும்பியவர்களுக்கென்றே பிரத்தியேகமாக ஒப்பளிக்கப்பட்டன அல்ல. பர்மாவிலிருந்து தாயகம் திரும்பிய தமிழர்கள் மேற்சொன்ன இரு பள்ளிகளின் பயிற்சி வகுப்புகளிலும் சேர அனுமதிக்கப்படுகின்றனர்."

4. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப் பேரவையின் நடைமுறை விதி 6 (1)-க்கு இணங்க இக் கூட்டத் தொடரின் மாற்றுத் தலைவர்களாக

1. திரு. நா. வீராசாமி,
2. திரு. கே. ஆர். கோவிந்தன்,
3. திரு. எஸ். இராமலிங்கம்,
4. திரு. எஸ். சிவசுப்பிரமணியன்,
5. திரு. எஸ். முத்துலிங்கம்,
6. திரு. கொடவாசல் சி. கிருஷ்ணமூர்த்தி

ஆகியோரை நான் நியமித்துள்ளேன்.

6. அறிக்கை அளித்தல்.

1967-68-ம் ஆண்டுக்கான காட்டிய, அனுமதித்த நிதி ஒதுக்கீடுகளுக்கும் மேற்பட்ட தொகை குறித்த பொதுக் கணக்காய்வுக் குழுவின் அறிக்கை.

THIRU P. G. KARUTHIRUMAN : Sir, I present the Report of the Public Accounts Committee on the Excesses over Voted Grants and Charged Appropriations for the year 1967–68.

7. அரசினர் தீர்மானம்.

விதி 23 (1)-ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழ் நாடு சட்டப் பேரவை விதிகளின் 23(1)-வது விதியைத் தளர்த்திவிட்டு இப்பேரவை இன்று அரசினர் அலுவலை எடுத்துக் கொள்ள வேண்டும்."

என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.